Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 235 | உள்ளூர் - 23.08.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 235 | வெளியூர் - 24.08.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

பண்டிகை காலத்தில் 10 லட்சம் வேலைகள்!

யுபிஎஸ்சியில் 80 வேலைவாய்ப்புகள்!

பண/ தொழில் தடைகள் நீங்க... பரிகாரங்கள்!

டெல்லியை மிரட்டும் 'H1N1'!

## அமெரிக்காவின் பொருளாதாரப் போரில் பங்கேற்கும் நாடுகள் எதிரிகளே: ஈரான் திட்டவட்டம்!



ஈரான், ஆக. 23–

ஈரானுக்கு எதிராக அமெரிக்க கொண்டுவரவுள்ள பொருளாதாரப் போரில் பங்கேற்கும் அனைத்து நாடுகளும் எதிரிகளாகவே கருதப்படுவார்கள் என ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரானை பொருளாதார ரீதியாகத் தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் இணையுமாறு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நட்பு நாடுகளை வலியுறுத்தி வருகிறார். அதேநேரம், ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் போர் ஆறு மாத காலத்தை நெருங்கி வருகிறது.

இந்த நிலையில், ஈரானின் உயர்நிலை தேசிய பாதுகாப்பு கவுன்சில் தலைவர் மொஹ்சென் ரெசாய் அரசுத் தொலைக்காட்சியில் பேசுயபோது, "அமெரிக்காவின் பொருளதாரப் போரில் இணைய வேண்டாம் என அனைத்து நாடுகளுக்கும் நாங்கள் அறிவிக்கிறோம்.

ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடை நடவடிக்கையில் ஈடுபடும் எந்தவொரு நாடும் எதிரியாகவே கருதப்படும். சம்பந்தப்பட்ட நாடுகள் அமெரிக்காவிடமிருந்து விலக மறுத்தால் ஈரான் அவர்களை மோசமாக நடத்தும்.

நாங்கள் இதுவரை அமெரிக்காவின் எந்தவொரு பொருளாதார கட்டுமானங்களையும் தாக்கவில்லை. இந்தப் போரில் ஈரான் கையாளுவதற்கு இன்னும் பல உத்திகள் உள்ளன.

இதுவரை நாங்கள் ராணுவத் தளங்களை மட்டுமே குறிவைத்து தாக்குதல் நடத்தினோம். ஆனால், அவர்கள் எங்களின் மீது பொருளாதாரத் தடை விதிக்க விரும்பினால், ஈரானைச் சுற்றியும் மற்றும் பிற இடங்களிலும் அமெரிக்காவின் எண்ணெய் மற்றும் பொருளாதார நிறுவனங்கள் உள்ளன. நாங்கள் அவற்றின் மீது தாக்குதல் நடத்துவோம். எங்களுடைய எதிர்வினை ஒரு நிலநடுக்கத்தைப் போன்று இருக்கும்" என்று அவர் எச்சரிக்கும் விதத்தில் பேசினார்.

ஈரானின் முக்கிய நட்பு நாடான சீனா உள்பட பல நாடுகளையும் பொருளாதார ரீதியாக தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் இணையுமாறு அமெரிக்கா அழைத்துள்ளது. ஆனால், அமெரிக்காவின் தடையால் இந்த மோதலைத் தீர்க்க முடியாது என சீனா விமர்சித்துள்ளது.

ஈரானின் முக்கிய வர்த்தக நட்பு நாடான ஐக்கிய அரபு அமீரகம், மறு அறிவிப்பு வரும் வரை ஈரானுடன் அனைத்து வர்த்தக மற்றும் நிதிப் பரிவர்த்தனைகளை நிறுத்தி வைப்பதாக சில நாள்களுக்கு முன் அறிவித்தது.

## அரசு பதவியில் பிரதமர் மோடிக்கு 25 ஆண்டுகள் நிறைவு - சாதனையை கொண்டாடுகிறது பாஜக!



புதுடெல்லி, ஆக. 23–

பிரதமர் மோடி, ஆட்சித் தலைமையில் 25 ஆண்டுகளை நிறைவு செய்வதை, ஓராண்டுக்கு கொண்டாடுவது என பாஜக முடிவு செய்துள்ளது.

பிரதமர் மோடி அரசு பதவிக்கு வந்து அக்டோபர் 7–ந் தேதியோடு 25 ஆண்டுகள் நிறைவு பெற இருக்கிறது. இதனை முன்னிட்டு அடுத்த மாதம் (செப்டம்பர்) 17–ந் தேதி (பிரதமர் மோடி பிறந்தநாள்) முதல் அக்டோபர் மாதம் 2–ந்தேதி வரை (காந்தி பிறந்த நாள்) சேவை மற்றும் உறுதிக்கான பெருவிழா என்ற விழாவை 2 வாரங்கள் நடத்த முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. இதனையொட்டி ரத்ததான முகாம்கள், மரம் நடும் இயக்கங்கள், தூய்மை பிரசாரங்கள், நீர் சேமிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்படுகின்றன. மேலும் கட்சி பொறுப்பாளர்கள் மாநிலம் விட்டு மாநிலம் சென்று கலாசார பரிமாற்றம் செய்யும் "வேற்றுமையில் ஒற்றுமை" என்ற நிகழ்வும் நடைபெறுகிறது.

சிக்கிம் முதல்–மந்திரியாக பவன்குமார் சாம்லிங், ஒடிஷா முதல்–மந்திரியாக நவீன் பட்நாயக் ஆகியோர் தொடர்ந்து 24 ஆண்டுகளும், மேற்கு வங்க முதல்–மந்திரியாக ஜோதிபாசு 23 ஆண்டுகளும் இருந்துள்ளனர். மோடியின் இந்த சாதனையை ஓராண்டுக்கு கொண்டாட பாஜக முடிவு செய்துள்ளது.

## தீவிரமடையும் வர்த்தகப் போர்!



ஒட்டாவா, ஆக. 23–

டிரம்ப் நடவடிக்கைக்கு பதிலடியாக அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 50 சதவீதம் வரிவிதிப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

**நட்பு நாடுகள்**

அமெரிக்காவும், கனடாவும் பல ஆண்டுகளாக பாதுகாப்பு மற்றும் வர்த்தகத் துறைகளில் மிக நெருங்கிய நட்பு நாடுகளாகத் திகழ்ந்து வருகின்றன. எந்தவொரு பாதுகாப்பும் இல்லாத 8 ஆயிரம் கி.மீ. எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் இந்த இரு நாடுகளுக்கு இடையே, தினமும் சுமார் ரூ.20 ஆயிரம் கோடி (200 கோடி டாலர்) மதிப்பிலான வணிகப் பொருட்களும் தடையின்றி எல்லையை கடந்து சென்று வருகின்றன.

**புதிய வர்த்தகக் கொள்கை**

இத்தகைய சூழ்நிலையில், டிரம்ப் தனது 2–வது ஆட்சி காலத்தில் அமெரிக்கத் தொழில்களை மேம்படுத்துவதற்காக புதிய வர்த்தகக் கொள்கைகளைக் கையில் எடுத்துள்ளார். கடந்த ஆண்டு அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி, உலக நாடுகள் பலவற்றின் இறக்குமதிப் பொருட்களுக்கு அவர் கூடுதல் வரிகளை விதித்தார்.

இதற்குப் போட்டியாகக் கனடாவும், சீனாவும் மட்டுமே அமெரிக்காவுக்கு கூடுதல் வரிகளை விதித்துப் பதிலடி கொடுத்தன. இதனால் ஆத்திரமடைந்த டிரம்ப், கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ரூ.2 லட்சம் கோடி (2 ஆயிரம் கோடி டாலர்) மதிப்பிலான பொருட்களுக்கு 50 சதவீத வரியை விதிக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

இதனால் கனடாவின் ஆண்டு ஏற்றுமதி 5 சதவீதம் அளவில் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. இந்த வரிவிதிப்பானது கடந்த 19–ந்தேதி முதல் அதிகாரப்பூர்வமாக அமலுக்கு வருவதாக இருந்தது. இந்தநிலையில் இருதரப்பினரிடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டதை தொடர்ந்து வரிவிதிப்பை ஒத்திவைப்பதாக டிரம்ப் அறிவித்தார்.

**பேச்சுவார்த்தை தோல்வி**

இதனிடையே இருதரப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. இதனால் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தபோதே கனடா மீதான வரிவிதிப்பை டிரம்ப் நடைமுறைப்படுத்தினார். அமெரிக்கா முன்மொழிந்த நிபந்தனைகள் நியாயமற்றவை எனக்கூறி பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிட்டு கனடா குழுவை ஒட்டாவாவுக்கு திரும்புமாறு கனடா பிரதமர் மார்க் கார்னி உத்தரவிட்டார்.

மேலும் கனடா மீதான அமெரிக்கா வரிவிதிப்புக்கு எதிராக அமெரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் அனைத்து பொருட்களுக்கும் பரஸ்பரம் 50 சதவீதம் வரிவிதித்து மார்க் கார்னி உத்தரவிட்டார்.

## ஈரானுக்கு டிரம்ப் 'செக்'!

# ராணுவம் வேண்டாம்... பொருளாதாரப் போர்!

# 25-50% வரி... உலக நாடுகளுக்கும் குறி!

## திங்கள் இரவு 11.30... 'ECONOMIC D-DAY'!




அமெரிக்கா, ஆக. 23–

அமெரிக்கா–ஈரான் இடையேயான மோதல் புதிய கட்டத்தை எட்டியுள்ளது. ஈரானுக்கு எதிரான ராணுவ நடவடிக்கையில் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காததுடன், வளைகுடா நாடுகளின் கடும் எதிர்ப்பும் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்கா தனது வளைகுடா ராணுவ தளங்களை காலி செய்து வெளியேறும் ஆலோசனையில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், அதிபர் டொனால்டு டிரம்ப், ராணுவ தாக்குதல் பாதையில் இருந்து விலகி, ஈரானை பொருளாதார மற்றும் நிதியியல் ரீதியாக முடக்கும் புதிய திட்டத்தை முன்னெடுக்கத் தயாராகி வருகிறார்.

**முன்னெப்போதும் இல்லாத கட்டுப்பாடுகள்?**

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா "Economic D–Day" அறிவிக்க உள்ளதாக டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுவரை எந்த நாட்டுக்கும் விதிக்கப்படாத அளவிலான கடுமையான பொருளாதார கட்டுப்பாடுகள் மற்றும் நெருக்கடிகள் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை அமெரிக்க கருவூலச் செயலாளர் ஸ்காட் பெசென்ட் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம், ஈரானை உலகளாவிய வர்த்தக மற்றும் நிதிச் சந்தைகளில் இருந்து தனிமைப்படுத்துவது என கூறப்படுகிறது.

**ஈரானுடன் வர்த்தகம் செய்தாலும் சிக்கல்!**

ஈரானுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ வர்த்தகம் செய்யும் நிறுவனங்கள் கடும் பாதிப்பை சந்திக்க நேரிடும். ஈரானுடன் வர்த்தகம், நிதியுதவி அல்லது ஆயுத விநியோகம் உள்ளிட்ட எந்த வகையிலும் தொடர்பு வைத்திருக்கும் நாடுகளுக்கு 25 முதல் 50 சதவீதம் வரை வரி விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், ஈரானிலிருந்து மறைமுகமாக உலகச் சந்தைக்கு வரும் கச்சா எண்ணெய் வர்த்தகத்தையும் முழுமையாக முடக்கும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

நிதி அமைப்புகளுக்கும் கிடுக்கிப்பிடி!

இதனுடன், கரன்சி ஸ்வாப் லைன்கள், நிதிப் பரிமாற்றங்கள், வெளிநாட்டு நாணயப் பரிமாற்ற அமைப்புகள் மற்றும் ஈரானின் சர்வதேச வர்த்தகத்திற்கு உதவும் நிறுவனங்கள் மீதும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்.

**திங்கட்கிழமை இரவு 11.30!**

ஈரானுக்கு எதிரான இந்த "Economic D–Day" அறிவிப்பை வெளியிட, அமெரிக்க கருவூலச் செயலாளர் ஸ்காட் பெசென்ட் திங்கட்கிழமை இந்திய நேரப்படி இரவு 11.30 மணிக்கு செய்தியாளர்களை சந்திக்க உள்ளார். அமெரிக்க நேரப்படி இது பிற்பகல் 2 மணியாகும்.

**ஈரான் மீது ஏற்கெனவே நீண்டகால தடைகள்**

ஈரான் மீது அமெரிக்கா மட்டுமின்றி ஐ.நா. மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் 1970–களில் இருந்தே பல்வேறு காரணங்களுக்காக தடைகளை விதித்து வருகின்றன.

கடந்த பிப்ரவரி மாதம் அமெரிக்கா நடத்திய ராணுவத் தாக்குதலுக்குப் பின்னர், ஈரான் மீது கடல் போக்குவரத்து, எரிசக்தி, நிதியியல் நடவடிக்கைகள் மற்றும் கடற்படை மூலம் துறைமுக முற்றுகை உள்ளிட்ட பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன.

கடந்த 6 மாதங்களில் ஈரானைச் சேர்ந்த கப்பல்கள், கப்பல் நிறுவனங்கள், தலைவர்கள், விமானங்கள், விமான நிறுவனங்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன், சுமார் 500 பில்லியன் டாலர் மதிப்பிலான கிரிப்டோகரன்சி நிதிப் பரிமாற்றங்களும் தடை செய்யப்பட்டு முடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், அமெரிக்கா அறிவிக்க உள்ள புதிய பொருளாதார நடவடிக்கைக்கு ஈரான் கடும் எதிர்ப்புதெரிவித்துள்ளது. இதனால், அமெரிக்கா–ஈரான் மோதல் மட்டுமின்றி, உலக வர்த்தகம், கச்சா எண்ணெய் மற்றும் சர்வதேச நிதிச் சந்தைகளிலும் புதிய பதற்றம் உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

## துப்பாக்கி முனையில் பொதுமக்கள் 60 பேரை கடத்தி சென்ற பயங்கரவாதிகள்!



அபுஜா, ஆக. 23–

மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்நாட்டில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள், ஆயுதக்குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத அமைப்புகளை சேர்ந்தவர்கள் அவ்வப்போது கிராமத்தினர், பள்ளிக்குழந்தைகளை கடத்தி செல்லும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நைஜீரியாவின் நைஜர் மாகாணம் டிகாரா மாவட்டம் கெபன்யா கிராமத்திற்குள் நேற்று முன் தினம் மதியம் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் புகுந்த பயங்கரவாதிகள் கிராமத்தினர் 60 பேரை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

இதில் பெரும்பாலானோர் கிராமத்தில் உள்ள இஸ்லாமிய மத வழிபாட்டு தலத்தில் வழிபாடு செய்துகொண்டிருந்தவர்கள் ஆவார்.

இந்த சம்பவம் குறித்து அறிந்த பாதுகாப்புப்படையினர் விரைந்து சென்று தீவிர தேடுதல் பணியில் ஈடுபடுவருகின்றனர். கிராமத்தினரை கடத்தி சென்ற பயங்கரவாதிகள் யார்? என்பது குறித்தும் மீட்பு, தேடுதல் வேட்டையிலும் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 23.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 06-ம் தேதி

# தங்கத்தில் முதலீடு செய்யப் போகிறீர்களா?



இந்தியர்களின் பாரம்பரிய சேமிப்பில் தங்கத்திற்கு எப்போதும் முக்கிய இடம் உண்டு. ஆபரணமாக வாங்குவது மட்டுமின்றி, முதலீட்டு நோக்கிலும் பலர் தங்கத்தைத் தேர்வு செய்கின்றனர். ஆனால் தங்கத்தில் முதலீடு செய்வதற்கு முன்பு சில முக்கிய விஷயங்களை கவனிப்பது அவசியம்.

முதலில் முதலீட்டு இலக்கை நிர்ணயிக்க வேண்டும். அவசரகால தேவைக்காகவா, நீண்டகால சேமிப்புக்காகவா என்பதை முடிவு செய்து, அதற்கேற்ப நகை, கோல்டு ETF உள்ளிட்ட முதலீட்டு முறையைத் தேர்வு செய்ய வேண்டும்.

அடுத்ததாக, உங்கள் நிதிநிலையை கவனிக்க வேண்டும். வருமானத்தை பாதிக்காத வகையில் சிறிய தொகையில் முதலீட்டைத் தொடங்கி, வருமானம் அதிகரிக்கும்போது முதலீட்டையும் உயர்த்தலாம்.


நம்பகமான தளத்தைத் தேர்வு செய்வதும் முக்கியம். டிஜிட்டல் முறையில் முதலீடு செய்யும்போது, பாதுகாப்பான மற்றும் ஒழுங்குமுறை கண்காணிப்பில் உள்ள முதலீட்டு வழிகளைத் தேர்வு செய்வது அவசியம்.

தங்கத்தின் சந்தை நிலவரத்தையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். விலை ஏற்ற இறக்கங்களை புரிந்துகொண்டு நீண்டகால நோக்கில் முதலீடு செய்வது நல்லது.

தொடர்ச்சியான முதலீடே வெற்றிக்கு முக்கியம். ஒரே நேரத்தில் பெரிய தொகையை முதலீடு செய்வதைவிட, குறிப்பிட்ட தொகையைத் தொடர்ந்து முதலீடு செய்வது பயனுள்ளதாக இருக்கும்.

மேலும், மொத்த முதலீட்டுத் தொகுப்பில் 20 முதல் 25 சதவீதம் வரை மட்டுமே தங்கத்திற்கு ஒதுக்குவது பரவலான நிதி ஆலோசனையாக உள்ளது. தங்கத்தை மட்டும் நம்பாமல், முதலீட்டை பல்வேறு வகைகளில் பிரிப்பதே பாதுகாப்பான அணுகுமுறையாகும்.

# வானிலையில் திடீர் திருப்பம்...!



சென்னை, ஆக. 23–

வடமேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக தமிழக கடலோரப்பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் ஒரு பலவீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை (Feeble Trough) நிலவுவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

மேலும் இதன் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுவையிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், ஏனைய தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டிருந் தது.

இந்நிலையில் வடமேற்கு வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகி உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதன்காரணமாக மேற்கு வங்காளம், ஒடிசா, வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகளில் நாளை வரை கடல் சீற்றமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கு வங்காளம், ஒடிசா, வடக்கு ஆந்திரப்பிரதேச கடலோரப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதியால் தமிழ்நாட்டுக்கு பாதிப்பு இல்லை என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# நடிகை சவுகார் ஜானகி உடல் அரசு மரியாதையுடன் தகனம்!



சென்னை, ஆக. 23–

நடிகை சவுகார் ஜானகி (94) காலமானார். கடந்த சில வாரங்களாக சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனையில், அனுமதிக்கப்பட்டிருந்தார் சவுகார் ஜானகி. செயற்கை சுவாச கருவி உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் காலமானார். அவரது மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், நடிகர்கள், நடிகைகள் இரங்கல் தெரிவித்தனர். நாசர், சத்யராஜ், எம்.எஸ்.பாஸ்கர், நடிகை ஷாலினி அஜித்குமார் உள்பட பலர் அவரது உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினர். தமிழக அரசு சார்பில் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், அமைச்சர் ராஜ்மோகன் ஆகியோர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள். அரசு மரியாதையுடன் பெசன்ட் நகரில் உள்ள மின் மயானத்தில் சவுகார் ஜானகியின் உடல் தகனம் செய்யப்பட்டது.

# கூட்டுறவு வங்கிகளில் தங்க நகைக்கடன் ரூ.10 ஆயிரமாக உயர்வு?



சென்னை, ஆக. 23–

கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் தங்க நகைகளை அடமானம் வைத்து பெறப்படும் கடன் தொகையை உயர்த்த கூட்டுறவுத் துறை முடிவு செய்துள்ளது. அதன்படி, ஒரு கிராம் தங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.10 ஆயிரம் வரை கடன் வழங்கப்பட உள்ளது.

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் தங்க நகைகளை அடமானம் வைத்தால், ஒரு கிராம் தங்கத்திற்கு தற்போது அதிகபட்சமாக ரூ.8 ஆயிரம் வரை கடன் வழங்கப்படுகிறது. தங்கத்தின் விலை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இந்தக் கடன் தொகையை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச சந்தை நிலவரங்களின் தாக்கத்தால் தங்கத்தின் விலை மீண்டும் உயர்ந்து வருகிறது. நேற்று 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு சவரனுக்கு ரூ.1 லட்சத்து 19 ஆயிரத்து 600 ஆக இருந்தது. இதனால், தங்கத்தை அடமானம் வைத்து அதிகளவில் கடன் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் நிதி நிறுவனங்களில் ஒரு கிராம் தங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.10 ஆயிரம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதனால், அதிக வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையில் கூட்டுறவு நிறுவனங்களிலும் தங்க நகைக்கடன் தொகையை உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களில் ஒரு கிராம் தங்கத்திற்கு ரூ.9 ஆயிரம் முதல் ரூ.10 ஆயிரம் வரை கடன் வழங்கும் வகையில் புதிய வரம்பை நிர்ணயிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பாக வரும் வாரம் நடைபெற உள்ள கூட்டுறவுத் துறை உயரதிகாரிகள் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# இடைத்தேர்தலுக்கு த.வெ.க. ‘ஸ்கெட்ச்’!



சென்னை, ஆக. 23–

முதல்–அமைச்சர் விஜய்யின் மேஜையில் உள்ள ஊழல் ‘பைல்கள்’ எப்போது வெளி வரும்? என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், இடைத்தேர்தலை சந்திக்க ஆளுங்கட்சியான த.வெ.க. ‘ஸ்கெட்ச்’ போட்டு வருகிறது.

**காலியாக உள்ள 7 தொகுதிகள்**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 234 சட்டசபை தொகுதிகளில், திருச்சி கிழக்கு, பெருந்துறை, மதுராந்தகம், தாராபுரம், அம்பாசமுத்திரம், கரூர், விராலிமலை ஆகிய 7 தொகுதிகள் காலியாக உள்ளன. இந்த தொகுதிகளில், திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம் ஆகிய 5 தொகுதிகளில் வெற்றி பெற்றவர்கள் மீது தேர்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், இடைத்தேர்தல் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

**இடைத்தேர்தல் எப்போது?**

இந்த நிலையில், மேற்கண்ட 5 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த சென்னை ஐகோர்ட்டு விதித்த தடை நாளையுடன் (ஆகஸ்டு 24) முடிவடைய இருக்கிறது. விரைவில், இந்த 5 தொகுதிகள் உள்பட மொத்தம் காலியாக உள்ள 7 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இடைத்தேர்தலில் வெற்றி பெறுவது என்பது ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்கு மிகவும் தேவையாக உள்ளது. காரணம், நடைபெற்று முடிந்த சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று த.வெ.க. ஆட்சி அமைத்தாலும், தனி மெஜாரிட்டி அந்த கட்சிக்கு கிடைக்கவில்லை.

**த.வெ.க.வுக்கு மெஜாரிட்டி இல்லை**

மெஜாரிட்டிக்கு 118 இடங்கள் தேவை என்ற நிலையில், 107 இடங்களே த.வெ.க.வுக்கு கிடைத்தன. அதன்பின்னர், காங்கிரஸ் (5), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), இந்திய கம்யூனிஸ்டு கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகளின் ஆதரவுடனேயே த.வெ.க. ஆட்சி அமைத்துள்ளது.

இதில், இரு கம்யூனிஸ்டு கட்சிகளை தவிர ஏனைய 3 கட்சிகள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளதால், அந்த கட்சிகளால் த.வெ.க. அரசுக்கு ஆபத்து வராது என்று நம்பலாம். ஆனால், மக்கள் பிரச்சினையை முன்வைத்து இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் எந்த நேரத்திலும் கூட்டணியை விட்டு வெளியேறும் சூழ்நிலை உள்ளது.

**இடைத்தேர்தல் வெற்றி முக்கியம்**

அவ்வாறு நடந்தால், த.வெ.க. அரசு ஆட்டம் கண்டுவிடும். அதனால், இடைத்தேர்தல் வெற்றி என்பது த.வெ.க.வுக்கு முக்கியம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. இடைத்தேர்தல் நடைபெறும் 7 தொகுதிகளிலும் த.வெ.க. வெற்றி பெற்றால், அக்கட்சியின் எம்.எல்.ஏ.க்கள் பலம் 114 ஆக உயரும்.

இது மெஜாரிட்டுக்கு தேவையான 118–ஐ விட 4 குறைவுதான் என்றாலும், கூட்டணியில் உள்ள காங்கிரஸ் கட்சியின் ஆதரவோ, அல்லது ஏனைய கட்சிகளில் 2 கட்சிகளின் ஆதரவோ த.வெ.க.வுக்கு கிடைத்தாலே போதும், 5 ஆண்டு கால ஆட்சிக்கு பிரச்சினை எதுவும் வராது.

பொதுவாக, இடைத்தேர்தல் முடிவுகள் என்பது ஆளுங்கட்சிக்கு சாதகமாகவே இருந்து வந்தாலும், இந்த முறை அந்த சாதகம் த.வெ.க. அரசுக்கு தேவையாக உள்ளது. அதற்கு த.வெ.க. ஆயத்தமாகி வருவதும் சமீபத்திய முதல்–அமைச்சர் ஜோசப் விஜய்யின் சட்டசபை பேச்சில் வெளிப்பட்டது.

**முதல்–அமைச்சர் விஜய் பேச்சு**

அதாவது, கடந்த 19–ந் தேதிய சட்டசபை நிகழ்வில், அமைச்சர்கள் ஆதாரத்துடன் பேச வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. அந்த நேரத்தில் எழுந்து முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் பேசியதாவது:–

நான் இதை சொல்ல வேண்டாம் என நினைத்தேன். ஆதாரம், ஆதாரம் என கேட்கின்றனர். ஒரு வாரத்திற்கு முன், இங்கு நிதி அமைச்சர் பேசும்போது, 3 துறை தொடர்பாக ஆய்வு செய்து, அது தொடர்பான விபரம் எனது மேஜையில் இருக்கிறது என சொன்னார்.

**இடைத்தேர்தலில் நல்லது நடக்க வேண்டாமா?**

அவர் போகிற போக்கில், அதை சொல்லவில்லை. உண்மையிலேயே என் மேஜையில் அத்தனையும் ஆதாரத்துடன் இருக்கின்றன. அதை ‘ஓபன்’ பண்ண வைத்துவிடாதீர்கள். எதை, எப்போது ‘ஓபன்’ பண்ண வேண்டுமோ, அப்போது, அது கரெக்டாக ‘ஓபன்’ செய்யப்படும்.

மக்களிடம் எப்போ பேசணும். என்ன பேசணும். எப்படி பேசணும். எல்லாம் பேசிவிட்டு தான், அன்பா.. ஆசையா.. எங்க எல்லாரையும் கொண்டு வந்து இங்கே உட்கார வைத்துள்ளார்கள். நான் பேசுவேன், பேசக்கூடாது என்றெல்லாம் ஒன்றுமில்லை. இடைத்தேர்தலிலாவது ஒரு சிலருக்கு நல்லது நடக்க வேண்டும் இல்லையா?.

இவ்வாறு அவர் பேசினார்.

**த.வெ.க. போடும் ‘ஸ்கெட்ச்’**

இதன் மூலம் இடைத்தேர்தலை சந்திக்க த.வெ.க. ‘ஸ்கெட்ச்’ போட்டு தயாராகிவருவது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. இதற்கிடையே, சட்டசபையில் நேற்று முன்தினம் பேசிய எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், “மேஜையில் இருக்கும் பைல்களை சீக்கிரம் திறந்து பாருங்கள். உருட்டல், மிரட்டலுக்கு எல்லாம் தி.மு.க. உறுப்பினர்கள் பயப்படமாட்டார்கள்” என்று பேசினார்.


இதனால், அந்த 3 பைல்களில் உள்ள விவரங்கள் எப்போது வெளிவரும்? என்ற எதிர்பார்ப்பு தமிழக மக்கள் மத்தியில் நிலவுகிறது. ஆனால், எப்போது?, எப்படி? அந்த பைல்களை வெளியிடுவது என்பது குறித்து ஏற்கனவே த.வெ.க. திட்டம் வகுத்துள்ளதாம்.

**இடைத்தேர்தல் தேதி அறிவித்த பிறகு..!**

அதாவது, இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்படும்போது, முதல்–அமைச்சர் மேஜையில் உள்ள ஊழல் பைல்களில் உள்ள விவரங்கள் வெளிவரும் என தகவல்கள் வெளியாகியுள்ளது. அவ்வாறு வரும்போது, மக்கள் மத்தியில் த.வெ.க.வின் செல்வாக்கு மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது.

இடைத்தேர்தலில் த.வெ.க. வெற்றியை எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. ஆகியவை எப்படி தடுக்கப்போகின்றன? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# சோனியாவின் “வாழ்க்கை ரகசியங்கள்!”



புதுடெல்லி, ஆக. 23–

பொது வாழ்க்கையில் நீண்ட காலமாக இருந்தாலும், தனது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து அதிகம் வெளிப்படுத்தாத காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, தற்போது தனது வாழ்க்கை வரலாற்றை சுயசரிதையாக எழுதியுள்ளார். 500–க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகம், பிரபல அமெரிக்க பதிப்பகம் மூலம் நவம்பர் 10–ம் தேதிவெளியாகிறது. ‘Belonging: A Journey of Love’ என பெயரிடப்பட்டுள்ள இந்த நூல், அச்சுப் பதிப்புடன் ஆடியோ புத்தகமாகவும் வெளியாகிறது.

ராஜீவ் காந்தியை முதன்முதலில் சந்தித்தது, அவருடன் ஏற்பட்ட காதல், திருமண வாழ்க்கை, மாமியார் இந்திரா காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம், பின்னர் ஸ்ரீபெரும்புதூரில் ராஜிவ் காந்தி விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அதிர்ச்சி, அதன்பிறகு அரசியலில் தான் சந்தித்த சவால்கள் என பல முக்கியமான நிகழ்வுகளை சோனியா இதில் பதிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. குறிப்பாக தமிழகம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் சம்பவம் தொடர்பான பல புதிய தகவல்கள் இடம்பெற்றுள்ளதாக காங்கிரஸ் மூத்த தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ராஜிவ் படுகொலை நடந்தபோது சம்பவ இடத்தில் இருந்த காங்கிரஸ் தலைவர் மரகதம் சந்திரசேகர், சோனியாவுக்கு தொலைபேசியில் தெரிவித்த தகவல்கள் உள்ளிட்ட விவரங்களும்இதில்இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நூல் வெளிநாடுகளில் அதிக வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. புத்தக விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் மகள் பிரியங்காவுக்கு செல்ல வேண்டும் என சோனியா தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த சுயசரிதை சோனியா மீதும், காங்கிரஸ் மீதும் மக்களிடையே பரிவை ஏற்படுத்தி, விலகிச் சென்ற வாக்காளர்களை மீண்டும் கட்சிக்கு கொண்டு வர உதவும் என காங்கிரஸ் வட்டாரங்கள் நம்புகின்றன. 2027–ல் நடைபெற உள்ள உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட 5 மாநில சட்டசபை தேர்தல்களிலும், 2029 மக்களவைத் தேர்தலிலும் இந்த நூல் தாக்கத்தை ஏற்படுத்தும்; ராகுல் காந்தி பிரதமராகும் அரசியல் பயணத்துக்கு இது அடித்தளமாக அமையும் என கட்சிக்குள் எதிர்பார்ப்பு நிலவுகிறது.



# பண/ தொழில் தடைகள் நீங்க... பரிகாரங்கள்!




பணவரவு, தொழில் வளர்ச்சி, வியாபாரத்தில் லாபம் உள்ளிட்ட விஷயங்களுக்கு ஜோதிடத்தில் குரு, சுக்கிரன், புதன், சனி ஆகிய கிரகங்களின் நிலை முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஒருவரது ஜாதகத்தில் இந்த கிரகங்களின் பலத்தைப் பொறுத்து பரிகாரங்களை மேற்கொள்ளலாம் என்பது ஜோதிட நம்பிக்கை.

குரு பகவான் செல்வம், வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளுக்கான கிரகமாகக் கருதப்படுவதால், வியாழக்கிழமைகளில் குரு வழிபாடு செய்து மஞ்சள் நிறப் பொருட்கள், கொண்டைக்கடலை போன்றவற்றை தானம் செய்வது சிறப்பானதாகக் கூறப்படுகிறது.

சுக்கிரன் செல்வம், வசதி மற்றும் வளத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. வெள்ளிக்கிழமை மகாலட்சுமியை வழிபட்டு, நெய் தீபம் ஏற்றி, வெள்ளை மலர்கள் சாத்துவது வழக்கமாக உள்ளது.

புதன் தொழில், வியாபாரம், அறிவு மற்றும் பேச்சுத்திறனுக்கான கிரகமாகக் கருதப்படுகிறது. புதன்கிழமையில் விநாயகரை வழிபட்டு பச்சைப் பயறு தானம் செய்வது பரிகாரமாகக் கூறப்படுகிறது.

தொழிலில் நீண்டகால தடைகள் அல்லது தாமதங்கள் இருப்பதாக நம்புபவர்கள் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாடு செய்து எள் எண்ணெய் தீபம் ஏற்றுகின்றனர். காகங்களுக்கு உணவளிப்பதும் பாரம்பரிய பரிகாரங்களில் ஒன்றாகும்.

மேலும், அன்னதானம், ஏழைகளுக்கு உதவுதல், கோயில் வழிபாடு, தான தர்மங்கள் ஆகியவை அனைத்து கிரகங்களின் அருளைப் பெற உதவும் என நம்பப்படுகிறது.

ஜோதிடப் பரிகாரங்கள் நம்பிக்கையின் அடிப்படையிலானவை. அவற்றுடன் திட்டமிட்ட சேமிப்பு, கடின உழைப்பு, சரியான முதலீடு மற்றும் தொழில் திட்டமிடலும் இணைந்தால்தான் நடைமுறை முன்னேற்றத்தை உருவாக்க முடியும்.

# தன்கர் ‘ராஜினாமா’ ரகசியம்... சுயசரிதையில் அதிர்ச்சி தகவல்கள்?




முன்னாள் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர், உடல்நிலையைக் காரணம் காட்டி கடந்த ஆண்டு திடீரென பதவியை ராஜினாமா செய்தார். ஆனால், மத்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாகவே அவர் பதவி விலகியதாக அப்போது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்பட்டது.

மூத்த வழக்கறிஞரான தன்கர் தற்போது மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளில் ஆஜராக தயாராகி வருகிறார். சமீபத்தில் உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத் தேர்தலில் வாக்களிக்கவும் அவர் நீதிமன்றம் சென்றார்.

அப்போது தனக்கு நெருக்கமான வழக்கறிஞர்களுடன் சுமார் 3 மணி நேரம் ஆலோசனை நடத்தியதாகவும், துணை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதற்கான காரணங்களை அவர்களிடம் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும், இந்த விலகல் பின்னணி குறித்த முழு விவரங்களையும் தனது சுயசரிதையில் பதிவு செய்ய உள்ளதாக தன்கர் தெரிவித்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த சுயசரிதை வெளியாகும் பட்சத்தில், அது பா.ஜ.,வுக்கு அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடும் என டெல்லி அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு நிலவுகிறது.

# ரஷியா செல்கிறார் வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர்!



புதுடெல்லி, ஆக. 23–

மத்திய வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் ரஷியாவில் இரண்டு நாள் பயணமாக ரஷியா செல்ல உள்ளார். இன்று ரஷிய தலைநகர் மாஸ்கோ செல்லும் ஜெய்சங்கர், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ரஷியத் தரப்பு அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

அத்துடன், ரஷிய துணைப் பிரதமர் டெனிஸ் மன்டுரோவுடன் இணைந்து, வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு (IRIGC–TEC) குறித்த கூட்டத்திற்கு தலைமை தாங்கி விவாதிக்க உள்ளார்.

மேலும், ரஷிய வெளியுறவுத்துறை மந்திரி செர்ஜி லாவ்ரோவைச் சந்திக்கும் ஜெய்சங்கர், பிராந்திய மற்றும் உலகளாவிய விவகாரங்கள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார் என்று அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# எலும்பு வலி... அலட்சியம் வேண்டாம்!



எலும்புகளில் ஏற்படும் வலி, வயது அதிகரிப்பதன் காரணமாக மட்டுமே உருவாகும் என்று நினைப்பது தவறு. கால்சியம் மற்றும் வைட்டமின் டி குறைபாடு, காயம், எலும்பு முறிவு, தொற்று, ஆஸ்டியோபோரோசிஸ், ரத்த ஓட்டத்தில் ஏற்படும் பாதிப்பு உள்ளிட்ட பல காரணங்களால் எலும்பு வலி ஏற்படலாம். சில நேரங்களில் இது தீவிரமான உடல்நலப் பிரச்சினைகளின் அறிகுறியாகவும் இருக்கக்கூடும்.

குறிப்பாக வயது அதிகரிக்கும்போது எலும்புகளின் அடர்த்தி குறைவதால் ஆஸ்டியோபோரோசிஸ் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. இதனால் முதுகுவலி, உயரம் குறைதல், உடல் தோரணையில் மாற்றம் உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். அதேபோல், எலும்பில் ஏற்படும் தொற்றால் வலி, வீக்கம், சிவத்தல், காய்ச்சல் போன்றவை உருவாகலாம். தொடர்ந்து நீடிக்கும் எலும்பு வலி, காரணமில்லாத எடை குறைதல், பசியின்மை, அதிக சோர்வு, வீக்கம் அல்லது உணர்வின்மை போன்ற அறிகுறிகள் இருந்தால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம். காயம் அல்லது விழுந்த பிறகு ஏற்படும் கடுமையான வலியையும் அலட்சியம் செய்யக்கூடாது.

வலிக்கான காரணத்தை கண்டறிய மருத்துவர் உடல் பரிசோதனையுடன் ரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, எம்.ஆர்.ஐ., சி.டி. ஸ்கேன் உள்ளிட்ட பரிசோதனைகளை பரிந்துரைக்கலாம். சிகிச்சை காரணத்தைப் பொறுத்து மாறுபடும். எலும்பு முறிவுக்கு கட்டு அல்லது ஸ்பிளின்ட், தொற்றுக்கு மருந்துகள், ஆஸ்டியோபோரோசிஸுக்கு உரிய சிகிச்சை மற்றும் சில சந்தர்ப்பங்களில் அறுவை சிகிச்சையும் தேவைப்படலாம்.

எலும்பு ஆரோக்கியத்தை பாதுகாக்க கால்சியம், வைட்டமின் டி நிறைந்த உணவு, வழக்கமான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உடல் எடை ஆகியவற்றை கடைப்பிடிக்க வேண்டும். புகைப்பிடிப்பதை தவிர்ப்பதும் முக்கியம். நீடிக்கும் எலும்பு வலிக்கு சுயமாக மருந்து எடுத்துக்கொள்ளாமல், மருத்துவரை அணுகுவதே பாதுகாப்பானது.

## சினிமா துளிகள்..!

## ஆகஸ்ட் 23, 2026 — சினிமா ஹாட் நியூஸ்!



**கோலிவுட்**

தமிழ் சினிமாவுக்கு புதிய சிக்கல்! செப்டம்பர் 1 முதல் புதிய படங்களை வெளியிட வேண்டாம் என தயாரிப்பாளர் சங்கம் முடிவு.

'என்ன விலை'க்கு சர்வதேச அங்கீகாரம்! நிமிஷா சஜயன் நடித்த படம் இஸ்தான்புல் கையா சர்வ தேச திரைப்பட விழாவுக்கு தேர்வு.

**பாலிவுட்**

திருமண பந்தத்தில் அர்ஜுன் ராம்பால்! நீண்டகால காதலி கேப்ரியெல்லா டெமெட்ரியாடெஸை திருமணம் செய்தார்.

'லல்காரா'வுக்காக அமீர் கானின் அதிரடி மாற்றம்! ஆசுதோஷ் கோவாரிகர் படத்திற்காக உடல் எடையை குறைக்கும் பணியில் அமீர் கான்.

நடிகை பூனம் தில்லானுக்கு டெங்கு! மருத்துவமனையில் சிகிச்சை; சிண்டா அமைப்பு விவகாரமும் தொடர்கிறது.

கத்ரீனாதனுஷ் கூட்டணி? சஞ்சய் லீலா பன்சாலியின் அடுத்த படத்தில் இருவரும் நடிக்க வாய்ப்பு என தகவல்.

'பட்வாரா 1947' வசூல் தொடர்கிறது! சன்னி தியோல் நடிப்பில் வெளியான படம் இரண்டாவது வாரத்தில் அடியெடுத்து வைத்துள்ளது.

**ஹாலிவுட்**

மிஷெல் பைஃபர் ஓய்வு இல்லை! சினிமாவிலிருந்து விலகுவதாக பரவிய தகவலை நடிகை திட்டவட்டமாக மறுத்தார்.

'Insidious' 'Mutiny' படங்களுக்கு போட்டி! ஆகஸ்ட் 21 வெளியான ஹாலிவுட் படங்கள் தற்போது திரையரங்குகளில் கவனம் பெற்றுள்ளன.

சர்வதேச திரைப்பட விழாவில் 'Everytime' வெற்றி! சாராயேவோ திரைப்பட விழாவில் சிறந்த படத்துக்கான விருது பெற்றது.

ஆகஸ்ட் இறுதியில் புதிய OTT படங்கள்! ஹாலிவுட் மற்றும் சர்வதேச படங்களுடன் புதிய ஸ்ட்ரீமிங் வெளியீடுகள் வரிசையாக வெளியாகின்றன.

# உசைன் போல்ட் சாதனையை முறியடித்த சீன ரோபோ!




புதுடெல்லி, ஆக. 23–

ஜமைக்காவின் புகழ்பெற்ற ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட் படைத்திருந்த 100 மீட்டர் ஓட்டப்பந்தய உலக சாதனையை, சீனாவைச் சேர்ந்த மனித உருவ ரோபோ ஒன்று முறியடித்துள்ளது. 'லைட்னிங்' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த அதிவேக ரோபோ, பெய்ஜிங்கில் சனிக்கிழமை தொடங்கிய 2–ஆவது உலக மனித உருவ ரோபோ விளையாட்டுப் போட்டிக்கான முன்னோட்ட சோதனையின்போது விநாடிக்கு 14.5 மீட்டர் என்ற அதிகபட்ச வேகத்தை எட்டி, இச்சாதனையைப் படைத்துள்ளது.

முன்னதாக, கடந்த ஏப்ரலில் நடைபெற்ற பெய்ஜிங் அரை மாரத்தான்(21 கி.மீ) ஓட்டப் பந்தயத்திலும் இந்த 'லைட்னிங்' ரோபோ பங்கேற்று, 50 நிமிடங்கள் மற்றும் 26 விநாடிகளில் இலக்கை அடைந்து வெற்றி பெற்றது.

# விமான நிலையங்களில் இனி 'முத்திரை' இல்லை!



புதுடெல்லி, ஆக. 23–

செப்டம்பர் 1 முதல் இந்தியாவின் அனைத்து சர்வதேச விமான நிலையங்களிலும் போர்டிங் பாஸ்/பயண அனுமதிச் சீட்டில் குடிவரவு முத்திரை குத்தும் நடைமுறை ரத்து செய்யப்படுகிறது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் குடிவரவு பணியகம் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது. இனி இந்தியாவில் இருந்து வெளிநாடு செல்லும் சர்வதேச பயணிகள், தங்களது ஸ்மார்ட்போனில் உள்ள இ–டிக்கெட் அல்லது அனுமதிச் சீட்டை காட்டினாலே போதும்.

பயணச்சீட்டுகளில் தொடர்ந்து முத்திரைகள் குத்தப்படுவதால் அவற்றை படிப்பதில் சிரமம் ஏற்படுவதுடன், பயணிகளுக்கும் நேரடியாக முத்திரையிடுவது சிரமமாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக பயணிகளிடம் இருந்து தொடர்ந்து வந்த புகார்களைத் தொடர்ந்து, முத்திரை குத்தும் முறையை முழுமையாக நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செப்.1 முதல் சர்வதேசப் பயணிகளுக்கு மொபைலில் இ–டிக்கெட் காட்டினால் போதும்!

# பழனியில் உறங்காப் புளியான் கோவிலில் திருவிளக்கு பூஜை, ரவி மனோகரன் எம்எல்ஏ பங்கேற்பு!



பழனி ஆகஸ்ட் 23–

பழனி அடிவாரம் பாளையத்தில் உறங்காப் புளியான் கோவிலில் உள்ளது. இக்கோவிலில் மூன்றாம் ஆண்டு உற்சவ திருவிழா நடைபெற்றது. இதையொட்டி அன்னதான விருந்து, குத்து விளக்கு பூஜை, உலக நன்மைக்காக சிறப்பு யாகம் போன்றவைகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் நேற்று உலக நன்மைக்காக திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் பழனி தொகுதி ரவி மனோகரன் எம் எல் ஏ பங்கேற்றார். இதில் கோவிலில் பொறுப்பாளர் உறங்கடி சித்தர் சுரங்கனி கணேசன் மற்றும் விழா குழுவினர் பங்கேற்றனர்.

செய்தியாளர்: சரவணன்.

# தேமுதிக சார்பில் கொடியேற்று விழா!



திருப்பூர், ஆக. 23–

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மறைந்த கேப்டன் விஜயகாந்த் அவர்களின் 74 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் மாநகர் மாவட்டம் வாவிபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டு கழக கொடியேற்றி பொதுமக்களுக்கு அன்னதானம் மாநகர் மாவட்ட செயலாளர் விசைத்தறி குழந்தைவேல் தலைமையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர் வசந்த் யுவராஜ், பகுதி செயலாளர் ஜெ. சரவணன், மாவட்ட இளைஞரணி செயலாளர் கே. கணேசன் மகளிர் அணி துணைச்செயலாளர் புனிதா, வட்ட செயலாளர் துரைசாமி மஞ்சுநாதன் சரவணன் காந்திநேரு மற்றும் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்

செய்தியாளர்: மணிகண்டன்.

# பழனிக்கு தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் கடத்தல்!



பழனி ஆகஸ்ட் 23–

பெங்களூரில் இருந்து பழனிக்கு ஆம்னி பஸ்ஸில் குட்கா பொருட்கள் கடத்தி வருவதாக பழனி டவுன் போலீஸ்க்கு தகவல் கிடைத்தது. இதை யொட்டி பழனி டவுன் போலிஸ் இன்ஸ்பெக்டர் தங்க முனியசாமி தலைமையிலான போலீசார், பஸ் நிலைய பகுதியில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்பொழுது பெங்களூரில் இருந்து பழனிக்கு வந்த தனியார் பஸ்சை தடுத்து சோதனை செய்ததில், பஸ்ஸில் பொருட்கள் வைக்கும் பகுதியில் இருந்த டயரை சோதனை இட்ட பொழுது, அதில் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலைப் பொருட்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது.

இதையொட்டி பஸ் டிரைவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். அதில் பெங்களூரில் இருந்து புகையிலை பொருட்கள் கடத்தி வந்தது தெரிய வந்தது.

அதை பழனியைச் சேர்ந்த இரண்டு பேர் வாங்கி விற்பனை செய்தது தெரிய வந்தது. இதையொட்டி பழனி மார்க்கண்டேயன் தெருவை சேர்ந்த ரியாஜுதீன் வயது 30, அவரது தந்தை ரகுமான் வயது 68 மேலும் பஸ் டிரைவர் ஈரோட்டைச் சேர்ந்த ராமமூர்த்தி வயது 38 ஆகிய மூவரையும் போலீசார் கைது செய்தனர். தடை செய்யப்பட்ட 17 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

# ஒடிசா கடலில் கோர விபத்து! கப்பலுடன் 24 பேர் மாயம்!!

ஒடிசா, ஆக. 23–

ஒடிசா கடற்பகுதியில் 72,100 டன் இரும்புத் தாதுவுடன் சென்ற எம்வி ஓஷன் வின்னர் (MV Ocean Winner) என்ற பனாமா கொடியுடன் சென்ற சரக்குக் கப்பல் வங்காள விரிகுடாவில்



மூழ்கியுள்ளது. ஒடிசாவின் பாரதீப் துறைமுகத்திலிருந்து சிங்கப்பூருக்குச் செல்ல கடந்த ஆகஸ்ட் 20 ஆம் தேதி இரவு 10.42 மணியளவில் இக்கப்பல் புறப்பட்டது.

இக்கப்பலில் மொத்தம் 24 பணியாளர்கள் பயணம் செய்தனர். இவர்களில் 20 பேர் சீனா நாட்டைச் சேர்ந்தவர்கள், 3 பேர் மியான்மரைச் சேர்ந்தவர்கள் மற்றும் 1 பேர் பங்களாதேஷைச் சேர்ந்தவர் ஆவர்.

கப்பல் கடற்கரையிலிருந்து சுமார் 240 கடல் மைல் தொலைவில் சென்றபோது, திடீரெனக் கண்காணிப்பு அமைப்புகளில் இருந்து மறைந்ததுடன், தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதுகுறித்து தகவலறிந்த இந்திய கடலோர காவல்படையினர் (ICG) மற்றும் இந்திய கடற்படையினர் உடனடியாகத் தீவிர தேடுதல் மற்றும் மீட்புப் பணியில் இறங்கினர். அருகில் சென்ற எம்டி ஐசோபோஸ் (MT Aisopos) என்ற வணிகக் கப்பல் மூலம் நடத்தப்பட்ட தேடுதலில், இரண்டு லைஃப் ராஃப்ட்களிலிருந்து இரண்டு பணியாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர். மீதமுள்ள 22 பேரைக் கண்டுபிடிக்கும் பணியில் 'வரத்', 'அன்மோல்' மற்றும் 'விஜித்' ஆகிய கடலோர காவல்படை கப்பல்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

# டெல்லியை மிரட்டும் 'H1N1'!




டெல்லி, ஆக. 23–

டெல்லியில் பருவமழைக்குப் பிறகு H1N1 பன்றிக்காய்ச்சல் பாதிப்பு 6 மடங்கு அதிகரித்துள்ளது. ஒரே நாளில் 159 பேருக்கு இன்ஃப்ளூயன்சா உறுதி செய்யப்பட்ட நிலையில், 114 பேருக்கு பன்றிக்காய்ச்சல் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால், நடப்பாண்டில் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 1,777 ஆக உயர்ந்துள்ளது.

நிலைமை குறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் ஜே.பி. நட்டா தலைமையில் உயர்நிலைக் கூட்டம் நடைபெற்றது. டெல்லி மற்றும் NCR பகுதிகளில் மருத்துவமனைகளில் ICU, ஆக்சிஜன், தனிமைப்படுத்தும் படுக்கைகள் மற்றும் மருந்துகளை தயார் நிலையில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து, கைகளை அடிக்கடி கழுவ வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. காய்ச்சல், தொடர் இருமல், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் இருந்தால் உடனடியாக மருத்துவரை அணுகுமாறு சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

# வேலை வாய்ப்பு

## யுபிஎஸ்சியில் 80 வேலைவாய்ப்புகள்!




நிறுவனம்: ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC)

பணி: உதவி வருங்கால வைப்பு நிதி ஆணையர் (Assistant Provident Fund Commissioner)

துறை: ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO)

மொத்த காலியிடங்கள்: 80

பணியிடம்: இந்தியா முழுவதும்

வேலைவகை: நிரந்தரப் பணி

அறிவிப்பு எண்: 52/2026

விண்ணப்பம் தொடக்கம்: 22.08.2026

விண்ணப்பிக்க கடைசி நாள்: 11.09.2026 மாலை 6.00 மணி

விண்ணப்ப முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: www.upsc.gov.in

மத்திய அரசு பணியில் சேர விரும்பும் தகுதியானவர்கள், கடைசி தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

## பண்டிகை காலத்தில் 10 லட்சம் வேலைவாய்ப்புகள்! டிகிரி தேவையில்லை... பைக் இருந்தால் போதும்!



இந்தியாவில் பண்டிகைக் காலம் தொடங்க உள்ள நிலையில், ஆன்லைன் வர்த்தகம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. விநாயகர் சதுர்த்தி, தீபாவளி, ஆயுத பூஜை, கிறிஸ்துமஸ், பொங்கல் உள்ளிட்ட தொடர் பண்டிகைகளால் அடுத்த சில மாதங்களில் ஆடைகள், வீட்டு உபயோகப் பொருட்கள், பூஜைப் பொருட்கள் உள்ளிட்டவற்றின் ஆன்லைன் விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இதையடுத்து, இ–காமர்ஸ் மற்றும் விரைவு வர்த்தக நிறுவனங்களில் தற்காலிக வேலைவாய்ப்புகள் அதிகரிக்க உள்ளன. பிரபல ஆன்லைன் வர்த்தக நிறுவனமான மீஷோ, இந்த பண்டிகைக் காலத்தில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட தற்காலிக வேலைவாய்ப்புகளை உருவாக்க திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

மீஷோ விற்பனையாளர்களின் தேவைக்காக சுமார் 6.5 லட்சம் பேர் பேக்கேஜிங், உற்பத்தி மற்றும் கிடங்கு பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மேலும், அதன் தளவாடப் பிரிவான வால்மோ மற்றும் மூன்றாம் தரப்பு லாஜிஸ்டிக்ஸ் நிறுவனங்கள் மூலம் சுமார் 3.75 லட்சம் பேர் டெலிவரி, பொருட்களை வரிசைப்படுத்துதல், ஹப் செயல்பாடுகள் மற்றும் மேற்பார்வைப் பணிகளில் நியமிக்கப்பட உள்ளனர்.

மேலும், அமேசான், பிளிப்கார்ட் உள்ளிட்ட இ–காமர்ஸ் நிறுவனங்களும், பிளிங்கிட், செப்டோ, இன்ஸ்டாமார்ட் போன்ற விரைவு வர்த்தக நிறுவனங்களும் பண்டிகைக் கால தேவைக்காக கூடுதல் பணியாளர்களை தேர்வு செய்யத் தயாராகி வருகின்றன.

வேலை தேடும் இளைஞர்கள் மற்றும் பகுதி நேர வேலை விரும்புவோருக்கு இது முக்கிய வாய்ப்பாக அமையும்.

# தமிழக இன்ஜினியரிங் கல்லூரிகளில் 1.06 லட்சம் சீட்கள் காலி! அதிர்ச்சி!!



சென்னை, ஆக. 23–

தமிழகத்தில் இந்த ஆண்டு( 2026) பொறியியல் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை கடும் சரிவை சந்தித்துள்ளது. மொத்தம் 1,81,436 இடங்களில் 41.15% மட்டுமே இதுவரை நிரம்பியுள்ளன. இதனால் 1,06,778 இடங்கள் காலியாக உள்ளன.

422 கல்லூரிகளில் ஆய்வு:

7 கல்லூரிகளில் 100% சேர்க்கை

44 கல்லூரிகளில் 90%க்கும் மேல்

167 கல்லூரிகளில் 10%க்கும் குறைவு

23 கல்லூரிகளில் ஒருவர் கூட சேரவில்லை

கம்ப்யூட்டர் சயின்ஸ் படிப்புக்கு மட்டும் 17,524 மாணவர்கள் முன்னுரிமை அளித்துள்ளனர். அதேநேரத்தில் டேட்டா சயின்ஸ், ஜெனரேட்டிவ் ஏஐ உள்ளிட்ட சில புதிய பாடப்பிரிவுகளில் சேர்க்கை மிகக் குறைவாக உள்ளது. மாணவர்கள் கல்லூரி மற்றும் பாடப்பிரிவுகளை தேர்வு செய்வதில் அதிக கவனம் செலுத்துவதே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




# இந்து சமய அறநிலையத்துறையில் என்ன நடக்கிறது என்று வேவு பார்க்கும் சேகர்பாபு: அமைச்சர் ரமேஷ்!

திருச்சி, ஆக. 23–

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ் திருச்சி விமான நிலையத்தில் நிருபர்களிடம் கூறியதாவது:– சட்டசபையில் ஜனநாயகம் இருப்பதால் அனைவரின் குரல்களுக்கும் இடம் அளித்து வருகிறோம். அதில் தேவையற்ற வார்த்தைகள் இருந்தால் அதை நீக்குவது மரபுதான். ஜனநாயகம் கடந்த ஆட்சியில் இல்லை. அதனால் அது போன்ற வார்த்தைகளை மக்கள் கேட்டிருக்க முடியாது. எங்கள் ஆட்சியில் ஜனநாயகம் இருப்பதால் அதைக் கேட்க முடிகிறது. சட்டசபையில் சில முன்னாள் அமைச்சர்கள் தகாத வார்த்தைகள் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கு மாண்பு இருக்கிறதா? நாங்கள் எந்த வார்த்தைகளையும் பயன்படுத்தவில்லை.

எங்கள் அரசின் மீதும் முதல்–அமைச்சரை நோக்கியும் கேள்வி வரும்போது அதற்கு மற்ற அமைச்சர்கள் பதில் கூறுவதில் என்ன தவறு?

முன்னாள் அமைச்சர் சேகர் பாபு தன் மீது எந்த தவறும் இல்லை என தொடர்ச்சியாக கூறி வருகிறார். ஆனால்



இந்து சமய அறநிலையத்துறையில் என்ன நடக்கிறது என்பதை அவர் வேவு பார்த்து வருகிறார். அவர் பயத்தின் காரணமாகத்தான் அவ்வாறு செய்கிறார்.

தவறை கண்டுபிடித்து விடுவார்கள் என்கிற பயத்தின் காரணமாகத்தான் அரசு என்ன செய்கிறது என்பதை வேவு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பயமே எங்கள் ஆட்சிக்கு கிடைத்த முதல் வெற்றி.

கடந்த ஆட்சியில் விளம்பரத்திற்காக இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு அறிவிப்புகளை அறிவித்து விட்டார்கள். அதில் தொடங்கப்படாத பல பணிகள் உள்ளது. அதை நாங்கள் ஆய்வு செய்தோம். அதில் பன்னெடுக்கு கார் நிறுத்துமிடம், பக்தர்கள் தங்குவதற்கு சொகுசு விடுதி உள்ளிட்டவற்றை அறிவித்துள்ளார்கள். எந்த பக்தர்கள் சொகுசு விடுதியில் தங்குகிறார்கள் என தெரியவில்லை. அதனால் அந்த திட்டங்களை நாங்கள் ரத்து செய்துள்ளோம். கோவில்களில் நடைபெறும் தவறுகளை களைவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். 100 நாளில் எந்த மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. தலைகீழாக மாற்றுவதற்கு அரசு ஒன்றும் சினிமா கிடையாது.

தமிழ்நாட்டில் உள்ள 50 முதுநிலை கோவில்களுக்கு செல்லும் பக்தர்கள் செல்போனை எடுத்து செல்லக்கூடாது என்கிற நடைமுறையை அறிவித்து பின்பற்றி வருகிறோம். கோவில்களுக்கு வெளியே செல்போனை பாதுகாப்பாக வைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு பணம் வசூலிக்கப்படுவது வழக்கமான நடைமுறைதான். மக்கள் அதனை சரியாக பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# இன்னும் 2 ஆண்டுகளில் அறிவாலயம் வாடகைக்கு விடப்படும்: நிர்மல்குமார்!

மதுரை, ஆக. 23–

வரும் காலங்களில் அண்ணா அறிவாலயத்தை வாடகைக்கு விடும் நிலைக்கு திமுக சென்று விடும் என அமைச்சர் நிர்மல் குமார் விமர்சித்துள்ளார்.

மதுரையில் தவெக பொதுக் கூட்டத்தில் அமைச்சர் நிர்மல் குமார் பேசியதாவது, "நடந்து முடிந்த தேர்தலில் திமுகவை மக்களே பழிவாங்கி விட்டனர். அவர்களை நாங்கள் ஏன் தனியாக பழிவாங்க வேண்டும்?

இத்தனை ஆண்டுகளில் நீங்கள் என்னென்ன கொள்ளை அடித்தீர்கள்? என்னென்ன செய்தீர்கள்?







என்பதைப் பார்த்த மக்களே, உங்களைத் தூக்கி வெளியில் போட்டு விட்டார்கள்.

முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் தீய சக்தி திமுகவை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று கூறினர். அதற்காகத்தான் அந்தக் கட்சியையே (அதிமுக) தொடங்கினர். ஆனால், தற்போது திமுகவை விஜய் ஒழித்துக் கட்டி விட்டார்.

இனிமேல், அறிவாலயத்தை வெள்ளையடித்து, வாடகைக்குத்தான் விட வேண்டும். முரசொலி அறக்கட்டளைக்குத்தான் அவர்களுக்கு இவ்வளவு போட்டி. அதில்தான் சொத்துகள் அனைத்தும் உள்ளன. அந்த அறக்கட்டளையை யார் எந்த குடும்பம் கைப்பற்றுகிறது? என்பதுதான் போட்டி.

அறக்கட்டளையைக் கைப்பற்றிவிட்டு, அறிவாலயத்தை வாடகைக்கு விட்டுவிட்டு, வேறு வேலையைப் பார்க்கச் சென்று விடுவர். இது (தவெக) மக்களுக்கான அரசு. ஒவ்வோர் ஆண்டும் உங்களுக்குத் தேவையான அனைத்தும் கிடைக்கும். வரும் 5 ஆண்டுகளில் நிச்சயமாக ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவோம்" என்று தெரிவித்தார்.

# தவெக ஆட்சி அமைக்க காங்கிரஸ் இல்லையென்றால்... மாணிக்கம் தாகூர் பரபரப்பு பேட்டி..!

சென்னை, ஆக. 23–

சென்னையில் காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

இந்தியா கூட்டணியில் தவெக இருக்கிறதா? என்ற கேள்விக்கு "எப்போது தவெகவுக்கு எம்.பி.க்கள் கிடைக்கிறார்களோ, அப்போது அவர்களை இந்தியா கூட்டணியில் இணைத்துக் கொள்ள சொல்வோம். எம்.பி. இல்லாதவர்களை நாங்கள் கூட்டணியில் இணைய வரச்சொல்ல முடியாது. தற்போது அவர்களுக்கு எம்.பி.க்கள் கிடையாது. எம்.பி. இருந்தால் இந்தியா கூட்டணியில் சேர்த்துக் கொள்வோம். சட்டசபை தேர்தலில் தவெக 106 இடங்களைப் பிடித்து





வென்ற பிறகு விஜய் முதலில் போன் செய்தது ராகுல் காந்திக்கு தான். அவர் முதல்–அமைச்சராவதற்கு ராகுல் காந்தியிடம் தான் அவர் ஆதரவு கேட்டார். தவெகவுக்கு முதல் ஆதரவு கடிதம் காங்கிரஸ் கட்சி தான் கொடுத்து. அதனால், தவெகவின் இன்றைய அமைச்சர்கள் அனைவருக்கும் அந்த உண்மை தெரியும். அவர்களெல்லாம் அமைச்சராவதற்கு காங்கிரசின் ஆதரவு முதலில் வந்தது. இல்லையென்றால், மத்திய மந்திரி அமித்ஷா தவெகவின் கதையையும் முடித்திருப்பார். இந்நேரம் கட்சியை உடைத்து, எடப்பாடி பழனிசாமியை முதல்–அமைச்சர் ஆக்கியிருப்பார்கள் அவர்களைப் பொறுத்தவரை இந்த நிலை அனைவருக்கும் புரியும். முதலில் தேர்தல் வரட்டும். விஜய் எப்போதும் குறைவாகவேப் பேசுவார். தேர்தல் வரட்டும். பேச வேண்டிய நேரத்தில் அவர் சரியாகப் பேசுவார். இவ்வாறு அவர் கூறினார்.

# எம்.பி., ஆகிறார் ஸ்மிருதி?




புதுடில்லி, ஆக. 23–

காங்கிரசின் கோட்டை என கருதப்பட்ட, உத்தர பிரதேசத்தின் அமேதி தொகுதியில், 2019 லோக்சபா தேர்தலில், அக்கட்சியைச் சேர்ந்த ராகுலை, 55,000 ஓட்டுகள் வித்தியாசத்தில், பா.ஜ.,வைச் சேர்ந்த ஸ்மிருதி இரானி தோற்கடித்தார். ஆனால், 2024ல் அமேதி தொகுதியில் வேறொரு காங்., வேட்பாளரிடம் தோற்றுப்போனார். அதன்பின், இவர் கட்சியில் ஓரங்கட்டப்பட்டார்; முக்கிய பொறுப்பு வழங்கப்படவில்லை.

இந்நிலையில், பா.ஜ., தேசிய தலைவர் நிதின் நபின், ஸ்மிருதிக்கு தேசிய பொதுச்செயலர் பதவி வழங்கியுள்ளார். மொத்தமுள்ள எட்டு தேசிய செயலர்களில், ஸ்மிருதி மட்டுமே பெண். அடுத்தாண்டில் பிப்ரவரியில், உ.பி.,யில் சட்டசபை தேர்தல் நடக்கிறது. இந்த பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பு, கூடுதலாக ஸ்மிருதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

நவம்பரில், உ.பி.,யில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட, 10 ராஜ்யசபா எம்.பி.,க்கள் ஓய்வு பெறுகின்றனர். இந்த பதவிகளுக்கு தேர்தல் நடக்கும். இதில், பா.ஜ.,விற்கு எட்டு எம்.பி.,க்களும், சமாஜ்வாதி கட்சிக்கு இரு எம்.பி.,க்களும் கிடைக்கும். ஸ்மிருதியை ராஜ்யசபா எம்.பி.,யாக்க பா.ஜ., மேலிடம் முடிவு செய்துள்ளதாம்.

அடுத்த லோக்சபா தேர்தலில், இவரை களம் இறக்க கட்சி முடிவெடுத்து உள்ளதாம். அமேதி அல்லது ரேபரேலி தொகுதியில் ஸ்மிருதி போட்டியிடுவார் என, சொல்லப்படுகிறது. 'இத்தனை நாள் யாருமே கண்டுகொள்ளாத இவருக்கு, ஏன் திடீரென கட்சி பாசம் காட்டுகிறது?' என, கட்சிக்குள் பலர் கேள்வி எழுப்புகின்றனர்.

# வீடுகளில் சோலார் பேனல் அமைக்க ரூ.78 ஆயிரம் வரை மானியம்..!

கோவை, ஆக. 23–

பிரதம மந்திரியின் வீடுகளுக்கான சூரிய மின் திட்டத்தில் விண்ணப்பம் செய்வது தொடர்பான சிறப்பு முகாம் கோவை மின் பகிர்மான வட்டம் சார்பில் வரதராஜபுரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடந்தது. முகாமிற்கு மேற்பார்வை பொறியாளர் சாந்தநாயகி தலைமை தாங்கினார். இதில் ஒண்டிப்புதூர் செயற்பொறியாளர் பிந்து மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இது குறித்து மின்சார




வாரிய அதிகாரிகள் கூறியதாவது:–

இந்த திட்டத்தில் 1 கிலோ வாட்டுக்கு ரூ.30 ஆயிரம், 2 கிலோவாட்டுக்கு ரூ.60 ஆயிரம் மற்றும் 3 கிலோ வாட் மற்றும் அதற்கு மேல் ரூ.78 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் வங்கிகள் மூலம் உடனடியாக கடன் வழங்கப்படும். சூரிய திட்ட பணிகள் முடிவுற்ற 7 நாட்களில் இருந்து 30 நாட்களுக்குள் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் மானியம் செலுத்தப்படும்.

1 கிலோவாட் சோலார்பேனல் ஒரு நாளில் 4 முதல் 5 யூனிட் வரை மின் உற்பத்தி செய்யும். நுகர்வோர் செய்யும் முதலீட்டை உடனடியாக திரும்ப பெறலாம். கோவை மாவட்டத்தில் 9 ஆயிரம் குடும்பங்கள் சூரிய ஒளி மின் திட்டத்தில் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில் registration.pmsuryaghar.gov.in, www.pmsuryaghar.gov.in செய்யலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### ஆவணி சுபமுகூர்த்த நாள்:

# வாழை இலைக் கட்டு விலை கடும் உயர்வு!



சென்னை, ஆக. 23–

ஆவணி மாத சுப முகூர்த்த நாளையொட்டி, வாழை இலையின் விலை ரூ. 10,000 வரையில் கடுமையாக உயர்ந்துள்ளது. சுபமுகூர்த்த தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதாலும், தொடர்ந்து புதன்கிழமை ஓணம் பண்டிகை வருவதாலும் வாழை இலையின் தேவை அதிகரித்துள்ளது.

இதனால், வாழை இலையின் விலை கடுமையாக உயர்ந்து, தூத்துக்குடி காய்கறி சந்தையில் சிறிய வாழை இலைக் கட்டு ரூ. 2,000 முதல் ரூ. 2,500 வரையிலும், பெரிய வாழை இலைக் கட்டு ரூ. 8,000 முதல் ரூ. 10,000 வரையிலும் விற்பனையாகிறது. நாட்டுத்தார் ரூ. 1,000–க்கும், செவ்வாழைத் தார் ரூ. 1,400–க்கும் விற்பனையாகிறது.

சங்கரன்கோயில் சந்தையில் வழக்கமாக ரூ.500 முதல் ரூ.600 வரை விற்பனையான இலைக் கட்டு சனிக்கிழமை (ஆக. 22) ரூ. 3000 வரை விற்பனையானது. சிறிய அளவிலான (200 எண்ணம்) வாழை இலைக் கட்டு ரூ. 1,000 முதல் ரூ. 2,000 வரை, பெரிய அளவிலான (200 எண்ணம்) வாழை இலைக் கட்டு ரூ. 2,000 முதல் ரூ. 3,000 வரை விற்பனை ஆனது. இதனால் வாழை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# தி.மு.க.வில் நான் எல்.கே.ஜி.: செயற்குழுவில் ஓ.பன்னீர்செல்வம் பேச்சு!

சென்னை, ஆக. 23–

திருவிடைமருதூர் ராமலிங்கம், ஈரோடு கனிமொழி, பிரபு, கஜேந்திரன், திருத்துறைப்பூண்டி இளையராஜா, முகமது சசி உள்ளிட்டோரும் கட்சி எடுத்த முடிவுகள் பற்றி பேசினார்கள்.

அப்போது சட்ட மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நன்றாக அரசின் தவறுகளை சுட்டிக்காட்டுகிறார். ஆனால் முன்னாள் அமைச்சர்கள் பேசுவது அந்த அளவுக்கு இல்லை. ஒரு எம்.எல்.ஏ. ஆளும்



கட்சியைப் பார்த்து மாமன், மச்சான் என்றெல்லாம் பேசுகிறார். இப்படியெல்லாம் பேசலாமா? ஆக்கப்பூர்வமான கருத்துக்களை பேசச் சொல்லுங்கள் என்று ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் பேசுகையில், நான் சமீபத்தில்தான் புதிதாக கட்சியில் சேர்ந்தேன். தி.மு.க.வில் நான் எல்.கே.ஜி.தான். இனி பி.எச்.டி. பட்டம் பெறும் அளவுக்கு கட்சியில் எனது செயல்பாடுகள் இருக்கும் என கலகலப்பாக தெரிவித்தார்.

தி.மு.க.வில் 70 வயதுக்கு மேல் பதவி கிடையாது என்பது கட்சி தலைமைக்கு மட்டும் விதிவிலக்கு என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய லீமேன்ஸ் ரேஸில் விபத்து: நடிகர் அஜித்துக்கு என்ன ஆச்சு?

சென்னை, ஆக. 23–

திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வரும் நடிகர் அஜித் குமார், மோட்டார் வாகனப் பந்தயங்களில் தீவிர ஆர்வம் கொண்டவர். சர்வதேச அளவில் நடைபெறும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்று வரும் அவர், சமீபத்தில் 'அஜித் குமார் ரேசிங்' என்ற சொந்தப் பந்தய அணியை உருவாக்கி, பல்வேறு சர்வதேசப் தொடர்களில் களம் இறக்கி வருகிறார்.

தற்போது ஐரோப்பாவில் நடைபெற்று வரும் லீமேன்ஸ் சாம்பியன்ஷிப் பந்தயத்தில் அஜித்தின் அணி தீவிரமாகப் போட்டியிட்டது. பந்தயம் மிக விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த தருணத்தில், அஜித்தின் ரேஸ் கார் திடீரென கட்டுப்பாட்டை இழந்தது. கட்டுப்பாடற்ற கார், களத்தில் இருந்த மற்றொரு காரின் மீது பலமாக மோதி விபத்துக்குள்ளானது. இந்த மோதலைத் தொடர்ந்து, காரில்





சக்கரங்கள் செயலிழந்ததுடன் அடுத்தடுத்து தீவிர தொழில்நுட்பக் கோளாறுகளும் ஏற்பட்டன

காரின் முன்பகுதி சேதமடைந்தபோதிலும், நவீன ரேசிங் கார்களில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன பாதுகாப்பு உபகரணங்கள் அஜித்தைக் காப்பாற்றின. மேலும், பல ஆண்டுகால பந்தய அனுபவமும் தொழில்முறை திறனும் கொண்ட அஜித், எவ்வித காயமும் இன்றி காரில் இருந்து பாதுகாப்பாக வெளியேறினார்.

அஜித் விபத்தில் சிக்கிய செய்தி பரவியதும் உலகம் முழுவதிலும் உள்ள அவரது ரசிகர்கள் பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தனர். ஆனால், அவர் காயம் எதுவும் இன்றி நலமாக திரும்பியுள்ளார் என்ற அதிகாரப்பூர்வத் தகவல் வெளியான பிறகே அவர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

நடிகர் அஜித் கார் பந்தயங்களில் விபத்தைச் சந்திப்பது இது முதல் முறையல்ல. இதற்கு முன்பும் இத்தாலி, ஸ்பெயின், மலேசியா மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் நடைபெற்ற பந்தயங்கள் மற்றும் பயிற்சிகளின் போது அவர் விபத்துகளை எதிர்கொண்டு, லேசான காயங்களுடன் மீண்டுள்ளார். அபாயங்கள் நிறைந்த விளையாட்டாக இருந்தாலும், சவால்களை எதிர்கொண்டு மீண்டும் மீண்டும் பந்தயக் களத்தில் சாதனை படைத்து வருகிறார் அஜித்.

# கேஸ் சிலிண்டர் - இ-கே ஒய் சி-க்கு காலக்கெடு நிறைவு!




சென்னை, ஆக. 23–

தமிழகம் முழுவதும் சமையல் எரிவாயு சிலிண்டர் வாடிக்கையாளர்கள் மேற்கொள்ள வேண்டிய மின்னணு சரிபார்ப்பு பதிவுக்கான காலக்கெடு இன்றுடன் நிறைவடைகிறது.

இதுவரை தமிழகத்தில் சுமார் 85 சதவீத கேஸ் சிலிண்டர் வாடிக்கையாளர்கள் மின்னணு சரிபார்ப்பு பதிவை முடித்துள்ளதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில், இன்னும் 15 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் இந்தப் பதிவை மேற்கொள்ளாமல் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனால், மின்னணு சரிபார்ப்பு பதிவு செய்யாத வாடிக்கையாளர்கள் நாளை முதல் சிலிண்டர் முன்பதிவு செய்வதில் சிக்கல் ஏற்படுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

தமிழகத்தில் சமையல் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களில் 85 சதவீதம் பேர் இதுவரை மின்னணு சரிபார்ப்பு பதிவை நிறைவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 15 சதவீதம் பேர் இன்னும் பதிவு செய்யவில்லை. தமிழகத்தில் இந்த எண்ணிக்கை 50 லட்சத்துக்கும் அதிகமாக இருக்கும் என கூறப்படுகிறது. இதனால், காலக்கெடு முடிவதற்கு முன்பாக தங்களது மின்னணு சரிபார்ப்பு பதிவை முடித்துக்கொள்ளுமாறு வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயு விநியோக நிறுவனங்களின் செயலிகள் மூலமாகவும் மின்னணு சரிபார்ப்பு பதிவை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் எரிவாயு நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ செயலியைத் திறந்து, அதில் வழங்கப்பட்டுள்ள மின்னணு சரிபார்ப்பு பதிவு வசதியைப் பயன்படுத்தி தங்களது விவரங்களைச் சரிபார்த்து பதிவு செய்யலாம்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020